# மகிழ்மித்திரர்

## (கதம்பம்)

**மகிழினி காந்தன்**

*(தொகுப்பாசிரியர்)*

**நண்பர்கள் பதிப்பகம்**

மாற்றுத்திறன் நண்பர்கள் மட்டும் பணிபுரியும் பதிப்பகம்

145 பி, கோபாலகிருஷ்ணா காம்ப்ளக்ஸ்,

நேதாஜி சௌக், குடியாத்தம் – 632602 வேலூர் மாவட்டம்.

கைபேசி : +91-8925335858

மின்னஞ்சல் : nanbargalpathipagam@gmail.com

வலைப்பதிவு : www.nanbargalpathipagam.blogspot.in

**15 March 2018**

**15 March 2018**

# காணிக்கை



பதிப்புலகில் ஊக்கம் தந்து
பாவலர் ஆக்கங்கள்
பரவும் வகை எளிதாக்கிய
நேர்மைத் திறமும்
அன்புள்ளமும் கொண்ட
அமரர் **மனோபாரதி**க்கு
இந்நூல் காணிக்கையாகிறது...

**15 March 2018**

**15 March 2018**

# பொறுப்புத் துறப்பு

ஆக்கதாரர்களே தம் ஆக்கங்களுக்கு
உரிமையும் பொறுப்புமாவர்.

15 March 2018

# நூல் குறிப்பு


| | |
|---|---|
| நூல் பதிப்பு | : மார்ச் – 2018 |
| நூலின் பெயர் | : **மகிழ்மித்திரர்** |
| பொருள் | : பல்சுவைப் படைப்புகள் |
| நூல் ஆசிரியர் | : **மகிழினி காந்தன்** (தொகுப்பாசிரியர்) |
| நூல் உரிமை | : **மகிழினி காந்தன்** |
| நூலின் பக்கங்கள் | : 96 பக்கங்கள் |
| நூலின் அளவு | : 14.8 X 21 செ.மீ.(1/8 டெமி. /A5 அளவு) |
| உள்தாள் | : 70 GSM MAPLITHO |
| உறை | : 300 GSM MATTE LAMINATION |
| விலை | : ரூ. 100 |
| வெளியீடு | : **நண்பர்கள் பதிப்பகம்** |

வடிவமைப்பு & அச்சு / Publishment design & Print

**நண்பர்கள் பதிப்பகம்**
மாற்றுத்திறன் நண்பர்கள் மட்டும் பணிபுரியும் பதிப்பகம்
145 பி, கோபாலகிருஷ்ணா காம்ப்ளக்ஸ்,
நேதாஜி சௌக், குடியாத்தம் – 632602 வேலூர் மாவட்டம்.
கைபேசி : +91-8925335858
மின்னஞ்சல் : nanbargalpathipagam@gmail.com
வலைப்பதிவு : www.nanbargalpathipagam.blogspot.in

பதிப்பாசிரியர் : தண்டபாணிரவி – கைபேசி : +91-8925335858
மின்னஞ்சல் : nanbargalpathipagam@gmail.com
இணை ஆசிரியர் : நா.ரமேஷ்சுடலை பி.ஏ., – கைபேசி : +91-9750474698
மின்னஞ்சல் : rameshsudalai1980@gmail.com
அட்டை படம் வடிவமைப்பாளர் : ஜெயக்குமார் – கைபேசி : +91-9976219499
மின்னஞ்சல் : dhivajaya@gmail.com
மக்கள் தொடர்பு அதிகாரி : சுந்தரமூர்த்தி – கைபேசி : +91-9094805958
மின்னஞ்சல் : apyes9@gmail.com
பிழை திருத்தம் : விஜி – கைபேசி : +91-9047074995
மின்னஞ்சல் : anbudanviji1991@gmail.com

**15 March 2018**

# வாசிப்பும் பயனும் வளரட்டும்!

நட்புக்கள் சேர்ந்திருக்கும் இடத்தில் மகிழ்ச்சியும் கலகலப்பும் நிறைந்திருக்கும்.

அத்தகைய சூழ்நிலையை ஏற்படுத்தவே இந்நூல் தொகுப்பு.

மகிழ்மித்திரர் என்றால் மகிழ்ச்சியான நண்பர்கள். நட்புறவுகள் இணைந்து இந்நூலை வெளியிடுகிறோம் என்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

எல்லார்க்கும் எல்லாமும் ஒருங்கே பிடித்துப் போய்விடுவதில்லை என்பதும் இயல்பே. கவிதை சிலர்க்கும் கதை சிலர்க்கும் என்று ஒவ்வொருவரும் தத் தமக்குப் பிடித்தவற்றைத் தேடிக்கொண்டும் அதில் ஆழ்ந்து கொண்டும் இருத்தல் காண்கிறோம்.

குழந்தைகள் முதல் முதியோர் வரை யாபேர்க்கும் பிடிக்கும் வகையில் புத்தகம் ஆக்கவேண்டுமென்பது என் நீண்டநாள் எண்ணம். அது இந்நூல் மூலம் நிறைவாகிறது.

ஆன்மிகம் தொட்டு வாழ்க்கைப்பயனுள்ள சொந்தத் தேடல்களைப் படைப்புகளாக அளித்திருக்கிறோம்.

கவிதை, கதை, பாடல், சமையல், கைவினை, ஓவியம், கோலம், ஒளிப்படக்கலை, வீட்டுக்குறிப்புகள் போன்றவை இந்நூலில் மிளிர்கின்றன.

இவை யாவும் படைப்பாளிகளின் சொந்த அனுபவத் தேடல்களாகும். நூலை வாசித்துப் பயன் பெறுவீர்கள் என்ற முழு நம்பிக்கையுடன் தொகுத்திருக்கிறேன்.

முன்னட்டையின் ஒளிப்படத்தை எமக்கு அளித்த செல்வி கௌசிகாவுக்கும் மிகுந்த நன்றி!

**15 March 2018**

நம் தொகுப்பை அழகாக்கி வெளியிட்ட நண்பர்கள் பதிப்பகத்திற்கு மிகுந்த நன்றியை உரித்தாக்குகிறேன். படைப்பாளிகளை வாழ்த்தி மேலும் பல படைப்புகளை வெளிக்கொணர வேண்டுமென்ற வேண்டுகோளையும் முன் வைக்கிறேன்.

வாசிப்பும் பயனும் வளரட்டும்!

மகிழ்வுடன்,

**மகிழினி காந்தன் M.A.,B.Ed**

மின்னஞ்சல் : **mahilinikaanthan@yahoo.de**

முகவரி : **Roschistrasse 1A,**
**3007 Bern,**
**Switzerland.**

**15 March 2018**

# பதிப்புரை

மதிப்பிற்குரிய உயர்திருமதி.மகிழினி காந்தன் அவர்கள் படைத்த "**மகிழ்மித்திரர்**" (கதம்பம்) என்னும் நூலை வெளியிடுவதில் எமது பதிப்பகம் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றது. இது போன்ற நல்ல நூல்களையே எமது "நண்பர்கள் பதிப்பகம்" வெளியிட விரும்புகின்றது.

கவிதைகள் மற்றும் குட்டிக் கதைகளுடன் அழகாக வெளிவந்துள்ள இந்நூல் படைப்பாளிகளின் சிந்தனைச் சிதறல்களைத் தாங்கி வந்துள்ளது. சமுதாயத்தில் நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது இந்த நூல். மேலும் மண்வாசனை மாறாத திருநெல்வேலிப் பேச்சை வாசிக்கும் போது வாசகர்களுக்கு திருநெல்வேலிக்குள் இருப்பதைப் போன்று உணர்வு ஏற்படுகின்றது. ஒவ்வொரு கவிதையும் எத்தனையோ உயிர்களின் ஏக்கங்களையும் வாழ்க்கை முறையையும் அழகாக விளக்குகின்றது. படைப்பாளிகள் ஒவ்வொருவரின் படைப்பும் அருமை மிக அருமை!

கூட்டு முயற்சியில் வந்துள்ள இந்த நூல் சமுதாயத்திற்கு வேண்டிய பல அரிய விஷயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. என்ன இல்லை இந்த நூலில் என்று கேட்கும் வண்ணம் அழகாக இந்த நூல் வந்துள்ளது.

இந்நூலில் முக்கியமாக சொல்லப்பட வேண்டிய பாராட்டப்பட வேண்டிய விஷயம் மனித உணர்வுகளைத் தாங்கி வந்துள்ள அற்புதமான கவிதைகள் மற்றும் கதைகள். அன்பு, பாசம், கனிவு போன்றவை ஒவ்வொரு மனித வாழ்வையும் சொர்க்கமாக்கும் என்பது இந்நூலைப்படிக்கும் அனைவருக்கும் புரியும். இயல்பான வாசகங்களால் அழகாக வந்துள்ள இந்த நூல் அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் எளிமையாக உள்ளது. இதுவே இந்த நூலின் சிறப்பு.

இந்த நூலில் "அழகு ராஜா" என்னும் கதையில் வரும் அம்முக் குட்டி என்னும் கதாபாத்திரம் என் கண்களில் கண்ணீரை

வரவழைத்து விட்டது. உலகில் எத்தனையோ ஜீவன்கள் எப்படிப்பட்ட கஷ்ட சூழ்நிலையில் வாழ்கின்றன என்பதை நம்மால் உணர முடிகிறது. நூலில் உள்ள படங்களும் நேர்த்தியாக அமைந்துள்ளன.

மேலும் சமையல் குறிப்புகள் மற்றும் ஓவியங்கள் என்று படைப்பாளிகளின் திறமைகளை தாங்கி வந்திருக்கும் இந்த நூல் சமுதாயத்திற்கு அவசியமான ஒன்று. மற்ற நூல்களிலிருந்து மாறுபட்ட நூலாக இந்த நூல் அமைந்துள்ளது வரவேற்கத்தக்கது.

இந்த நூலில் வரும் ஒவ்வொரு கவிதைகளும், கதைகளும் படிப்போரின் மனதில் உடனடியாக ஆழப் பதிந்து விடும் என்பதில் ஐயமில்லை. கவிதைகளும், கதைகளும் மனித வாழ்வின் நிகழ்வுகளை படம் பிடித்துக் காட்டுகின்றன. இந்தக் கூட்டு முயற்சி மேன்மேலும் தொடர எமது “நண்பர்கள் பதிப்பகம்” சார்பாக நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நூலைச் சிறப்புடன் உருவாக்கிய உயர்திருமதி.மகிழினி காந்தன் அவர்கள் மேன்மேலும் இது போன்ற பல கூட்டு நூலை உருவாக்கி பல எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், மற்றும் சமையல் குறிப்புகள் தரும் இல்லத்தரசிகள் ஆகியோர் திறமைகளை வெளி உலகிற்கு கொண்டு வருமாறு எமது “நண்பர்கள் பதிப்பகம்” சார்பாக கேட்டுக் கொள்கின்றேன்.

அன்புடன்,
**தண்டபாணி ரவி**
பதிப்பாசிரியர்
நண்பர்கள் பதிப்பகம்

**15 March 2018**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | கோடி நன்றி – புதியவன் மார்க்கண்டு | 13 |
| 2 | அத்திப்பூக்கள் – ச.கலைவாணன் | 14 |
| 3 | மணிக்கதைகள் – வெ.சுப்ரமணியன் | 29 |
| 4 | மகிழ்... – மகிழினி காந்தன் | 35 |
| 5 | ஜீவிதங்கள் – ரா.த. ஜீவித்தா | 53 |
| 6 | துளிப்பாக்கள் –செல்வமணி செந்தில் | 59 |
| 7 | உயிர்அறை – மகா | 61 |
| 8 | உதகை ராணி – அகிலா ராமன் | 65 |
| 9 | கார்மேகம் – சிவா | 70 |
| 10 | அவன் தனிமரமில்லை – தண்டபாணிதென்றல் | 72 |
| 11 | குற்ற உணர்வில் – அமர்நாத் | 79 |
| 12 | மகிழ்ச்சி ஒளித் துளிகள் – ரஹ்மான் ஜியாவுதின் | 81 |
| 13 | கிரத்தின் – டிவோனா | 83 |
| 14 | பளிச்.. – சுரேகா | 85 |
| 15 | ஓவியத்துளிர்கள் – சாருதி | 87 |
| 16 | பென்சில் வரைவுகள் – நீமா | 89 |
| 17 | வஞ்சகமில்லா நெஞ்சங்கள் | 94 |


**15 March 2018**



# புதியவன் மார்க்கண்டு

சுவிஸ்

## கோடி நன்றி

உமக்கென்று செல்வேன்
ஊரெல்லாம் சொல்வேன்
கோடி நன்றி நாதா – என்
நாதனே கோடி நன்றி நாதா.. ( 2 )

நாதா உம்முகம் தேடி
தினம் நான் அலைந்தேங்க
ஓடி வருவீரையா – என்
நாதனே ஓடி வருவீரையா.. ( 2 )
( உமக்கென்று.....)

தனிமையொன்று உனக்கில்லை
எந்நாளும் துணை நிற்பேன்
வாக்குத் தந்தீரையா – என்
நாதரே வாக்குத் தந்தீரையா.. ( 2 )
( உமக்கென்று....)

கனிவாய் மொழி பேசி
கர்த்தா உம் புகழ்பாடி
எந்நாளும் களி கூருவேன் – என்
நாதரே எந்நாளும் களிகூருவேன்.. ( 2 )
( உமக்கென்று.....)

ச. கலைவாணன்

சம்போடை



# அத்திப்பூக்கள்

அனாதைக் குழந்தைகளுக்குக்
கிடைத்தது அம்மா அப்பா வேடம்
திறமையாய் நடித்தார்கள்
குடும்பமெனும் நாடகத்தில்....

எப்போதும்
அம்மாவே
திட்டித் தீர்த்து விடுவார்
அது ஒரு வேலி
வேறு யாரும்
திட்டாமல் இருக்க
வயோதிக அப்பாவை...

மிகச்சரியாக
இலக்கைத் தாக்கியது
ஏவுகணை.
பாராட்டுகள் குவிந்தன
மனித இனத்தை
அழிக்கிறோம் என்பதை
மறந்து....

ஆகாய விண்மீன்களைக்
காணும் தருணங்களில்...
மகள் சொன்ன
“வேலியோரம் கிடக்குப்பா விண்மீன்”
எனக் காட்டிய
மின்மினிதான் வந்து போகிறது
மனதில்..

எத்தனை குழிகளைத்
தோண்டினேன்
சம்பளத்திற்காக..
கடைசி வரை
புதைக்கவே இயலவில்லை
என் வறுமையை.....

ஒன்றாய் இருக்கும் வரைதான்
இறகுகள் சிறகாகி
காற்றை உந்தித் தள்ளும்
தனித்து உதிர்ந்தால்
காற்று அதன் வழிக்குத்
தள்ளும்....

செருப்பில்லாமல்
தேய்ந்த அப்பாவின் பாதங்கள்
சம்பாதித்துத் தருகின்றன
தன் மகனின் பாதங்களுக்கான
செருப்பை.....

மிகுந்து வீணாகிக் கிடக்கிறது
குப்பைத் தொட்டியில்
உணவும் தின்பண்டங்களும்
யாரோ ஒருவரின்
உயிர் தின்னும் பசியும்
கடின உழைப்பின் வேர்வையும்
சேர்த்தே...

விரல்களை
நுகர்ந்து பார்க்கிறாள்
பிள்ளைகளுக்கு
உணவு ஊட்டிய வாசம்
முதியோர் இல்லத்தில்
சேர்க்கப்பட
அம்மா...

குயிலோசை
நான் கேட்டதில்லை
என எப்போதும்
சொல்லிக் கொண்டிருந்தேன்
அப்பா! என நீ அழைக்க
அன்றோடு மறந்தேன்
அவ் வார்த்தையை....

எத்தனை விலை உயர்ந்த
ஆடைகளை அணிந்தாலும்
இன்று
வறுமைக் காலத்தில் அணிந்த
கிழிந்த ஆடைகளையே
தைத்துக் கொண்டிருக்கிறது மனம்...

பதின்மூன்றாவது மாடி
இலக்கம் நான்கின் கீழ் இருபத்தி மூன்று
குளிரூட்டப்பட்ட அறை
ஐம்பத்தாறு அங்குலத்தில்
அதி நுட்பத் தொலைக்காட்சி
ஐ தொலைபேசியில்
ஆயிரம் விளையாட்டு
செயற்கை நறுமணம் கமழும்
இயற்கையை மிஞ்சும்
அழகுப் பூந்தொட்டிகள்
கேட்கும் முன்பே
அவன் ஆசையைப் பூர்த்தி செய்யும் பெற்றோர்கள்
இவையனைத்திலிருந்தும்
விடுதலையாகி
நீள்கிறது அவன் ஏக்கப் பார்வை
தூரத்தில்
விளையாடும் ஏழைச் சிறார்களின்
மட்டைப்பந்து விளையாட்டை நோக்கி....

தன் மகள் விரும்பிய
பொம்மையை விற்கிறான்
வியாபாரி
அவள் பசி உணர்ந்து
மிகுந்த மன உளைச்சலோடு...

மாண்ட பின்பு
கூட்டம் கூட நூறு சொந்தம்
ஊடல் நாற்றம் கொண்டுவிடும்
என மூக்கைச் சிந்தும்..
முதுமையைக் கைகளில் ஏந்த
முன் வர யாருமில்லை
மரண பயத்திற்கு
ஆறுதல் கூற யாருமில்லை
தனியாக வந்தோம்
தனியாகச் செல்வோம்.....

விசுவாசமாய்
தொழும் மனிதர்களிடமும்
மரணத்தின் நாளைச்
சொல்வதில்லை
இறைவன்
அடுத்த நொடியின்
சந்தோசத்தை மனிதன்
இழந்து விடுவானோ
அல்லது அடுத்த வேளை
ஆராதனை கிட்டாதோ
எனும் பயத்தாலோ.....
கடவுளுக்கே வெளிச்சம்

கார் முகில்களைக் கண்டு
நாட்டியமாடிய மயிலிறகு ஒன்று
உதிர்ந்து சலனமற்று
நனைந்து கிடக்கிறது
பெருமழையில்
நான் வரும் பாதையில்
என்
முதுமையின் அச்சத்தைப்
பிரதிபலித்து....

மாண்டு கிடக்கிறது
மானுடம்
தசைகளை இழந்த
எலும்புகளாய்
கழுகுகளின்
புடைசூழ.....

பசியில் கிடந்த குடிசை
பாத்திரங்கள்
ஒழுகும் மழை நீரில்
நிரப்பிக் கொள்கின்றன
தங்கள் வயிற்றை.....

உழைத்துக் களைத்து
இரவின் மடியில்
உறங்கும் நேரத்தில்
இறங்கி வருகின்றன
எண்ணிலடங்கா
நிறைவேறா ஆசைகள்
ஏழையின் கனவுகளில்...

மெலிந்த கழுதை பூட்டிய வண்டி
குதிரையாக ஓடுகிறது
ஓட்டிச் செல்பவனுக்கு
ஒன்பது வயதிற்கும்
குறைவாக இருக்கலாம்
வற்றிய வயிற்றில்
ஒட்டியாணமாய்க் கோவணம்
கரிசல் சாலையில்
காற்றாய்ப் பறக்கிறது
காய்ந்த புல் கட்டுகளைச் சுமந்து...
எப்போதாவது சுமக்கலாம்
இவனின் உணவையும்
அது எப்போதென்பதுதான்
கேள்விக் குறியாய்.....
தெற்கு சூடான் நினைவுகள்

கனவில்
கட்டிய மாடி வீட்டிற்கு
வண்ணங்கள் பூசுகிறான்
குடிசையில் உறங்கிக் கொண்டே.....

நூலிழைகளின்றி
யார் நெய்தது
நிழலை.....

இருப்பதைக்
காலம் முழுவதும்
பங்கிட்டுத் தந்து விட்டு
எந்தப் பிள்ளையிடம்
தன் கடைசிக் காலம்
என்னும் பயத்துடன்
வயதான அப்பா....

எண்ணும் ஆசைகள் யாவும்
பூர்த்தியாகிவிட்டால்
வாழ்வின் சுவாரசியம்
குறைந்து போகும்
நிறைவேறா ஆசைகள்தான்
இயக்குகின்றன மனிதர்களை.....

முதியோரில்லத்து
விழுதுகளும்
வேர்களும்
பேசிக் கொள்கின்றன
நல்ல வேளை
ஆலமரமாய்ப் பிறந்தோம்
ஆளாகப் பிறக்காமல்....

கடந்து வந்த
காலத்தில் பயணிக்கிறது மனது
அகன்ற நெடுஞ்சாலை
அகற்றப்பட்ட மரங்கள்
எச்சிலூறும்
புளியம்பிஞ்சு
ஞாபகங்கள்....

குடிசை வீட்டு
ரசமிழந்த கண்ணாடி
சிறுமியின்
முகத்தைக் காட்டாமல்
வறுமையைக் காட்டுகிறது...

காத்து வந்த சிப்பிகள்
கடலோரமாகக் கிடக்க
முத்துகள் மணி மகுடத்தில்...

மடிப்புக் கலையாத
நாகரிக ஆடையில்
இருக்கும் மகனுக்கு
வெட்கமாகிப் போனது
தன் அப்பா இவர்தான் என
நண்பர்களுக்கு அறிமுகப்படுத்த
பழைய ஆடையுடன்
விடுதிக்கு வந்த
உழைக்கும் முதியவரைப் பார்த்து....

வானில்
உதிர்ந்த
இறகொன்று
காற்றின் கன்னத்தில்
கவிதை யொன்றை
எழுதித் தவழ்கிறது
ஏதொரு வலியுமின்றி...

சோப்புக் குமிழ்களில்
உடைந்து கொண்டிருக்கின்றன
பறக்கும் வானவில்கள்...

மனிதர்கள்
சோம்பேறித்தனமாக
வாங்கிய
உணவுப் பொருட்களைச் சுமந்த
நெகிழிப் பைகள்
பசியுடன் திரியும்
மாடுகளின்
இரைப்பைகளில்.....



தொண்ணூற்றொன்பது
பூக்களாம் தமிழ்ப் பெயரில்
மொத்தப் பூக்களின் அழகும்
பெற்ற மகளின் புன்னகை போல் ஆகுமா....

மேக நகர்தலை
அறியாத குழந்தையின் மனதில்
ஓடுகிறது நிலவு....

மரப்பாச்சி
காண ஆசை என் மகளுக்கு
எங்கும் கிடைக்காத
கதையாகிப் போச்சு
எத்தனையோ தானியங்கிப் பொம்மைகளை
வாங்கித் தந்தாலும்
மீண்டும் மீண்டும் கேட்பவளுக்கு
எப்படிப் புரிய வைப்பது
நான் வாழ்கிறேன் டிஜிட்டல் இந்தியாவிலென்று....

மகளின் எழுதுகோலுக்கு
மை நிரப்புகிறேன்
விரல்களில் ஒட்டிக் கொண்டது
என் மழலைப் பருவம்....

சு(ரு)தி குறைகிறது
புல்லாங்குழலில்

எட்டுக் கட்டை ராகத்தில்
வாசிக்கிறது
கழைக்கூத்தாடியின்
வயிற்றில் பசி....

எப்போதும் மண்வாசம்
சுமந்து வரும் காற்று
இன்று
உன் வாசம்
சுமந்து வருகிறதே
எங்கே நனைகிறாய்
நீயும் மழையில்...

மாமனார்
வரதட்சணையாகத்
தந்த புதுவீட்டில்
சுய முயற்சியில்
வீடு கட்டுகிறது
என்னைப் போல் அல்லாமல்
தன் மானம் மிக்க சிலந்தி.....

அதிக விலை கொடுத்து
வாங்க இயலாத பொம்மையைக்
கூடவே அழைத்து வந்திருந்தாள்
ஏழைச் சிறுமி
தன் மனதோடு...

கடவுளைத் தரிசிக்கச் சென்றேன்
வாசலில் அமர்த்தியிருந்தார்
யாசகர்களை…
காணிக்கையை
அவர்களுக்குச் செலுத்திவிட்டு
யாசகனானேன் வரம் வேண்டி
கைகளை ஏந்திக் கடவுளின் முன்பு…

நாளை
நிழலேந்திக்
காத்திருக்கும் உனக்காக..
இன்றே ஒரு மரக்கன்று
நட்டு வைத்தால்.....

கழைக்கூத்தாடியின்
குழலோசையில்
கசிகிறது பசி....

**- ச. கலைவாணன்** சம்போடை



# வெ.சுப்ரமணியன்

கோயம்பேடு, சென்னை

# மணிக்கதைகள்

## வித்தை

ஆடி மாத மூணாவது ஞாயித்துக்கெழமை ஊரில் அம்மன் கோவிலில் திருவிழா.

வழக்கமான மேலக் குடி ராஜமாணிக்கம் மேளம். திருச்சுழி கண்ணம்மா கரகம்.

ராஜ மேளம் அதிர ராத்திரி ஒம்பது மணிக்கு அதிர்வேட்டு முழங்கப் புறப்பாடு.

நேத்திலேர்ந்து சாப்பிடாத வயிறு தீயாக எரிகிறது ''டிராகன்'' குமாருக்கு. வாயில கிஷ்ணாயில் ஊத்திக்கிட்டு தீப்பந்தத்தைப் பார்த்து ஊதி வேடிக்கை காட்டி வாயெல்லாம் எரியுது.

இன்னும் நாலு தெரு பாக்கி. பொழுது விடிஞ்சி தர்மகர்த்தா ஆதி கேசவன் கூலி தர முன்னாடி 'சாமி காரியம் பாத்துக்கேளுடே, என் பேரன் ஒன் வித்தை பார்க்கலை. உறங்கிப்போட்டான். செத்த

சேம்ப பாக்காம வித்த காமிச்சிட்டு பலகாரம் ஆச்சிட்ட கேட்டு வேங்கிக்க, கேட்டியா. எனக்கு திரநேலி வர போற சோலியிருக்கு’, என்று பதிலை எதிர்பாராமல் தெருவில் இறங்கி நடக்க ஆரம்பித்தார். மிச்ச கெரசினில்தான் அடுப்பு எரியணும். அதுக்கும் வந்தது வினை. கூலி கிடைச்சு எப்ப சோறாக்கி எப்ப சாப்பிடறது.

மதியம் பன்னிரண்டு மணிக்கு எழுந்திரிச்சது தர்மகர்தாவின் பேரன். டிராகன் குமார், “சாமி, வித்தை பாக்கீயளா? காட்டுதேன்” என்றவனைச் சட்டை பண்ணாத பிள்ளை பின்கட்டில் கன்றுக்குட்டி பார்க்க ஓடிப்போனது.

ஆச்சியிடம் கூலி கேட்டவனுக்கு, செத்த இரு.. வாரேன் கிடைத்தது. பசி காதை அடைத்தது. அரை மயக்கத்தில் திண்ணைக்குக் கீழ் குத்த வைத்தான். நாலு மணிக்கு வந்த தர்மகர்த்தா, “லேய், இன்னுமாடா நீ போகலை. வள்ளியம்மை கோபாலு வித்தை பார்த்தானா? துட்டு குடுக்கப் போறேன்” என்றார்.

“எங்க இவன் காட்டினான். சொம்மா முட்டியக் கட்டிக்கிட்டு திண்ணைக்கு பக்கத்தில் உட்கார்ந்து கிடந்தான்.

பேசின தொவை கொடுக்காண்டாம். சித்த குறைச்சே கொடுங்க”

“அட, அப்படியா சேதி, லே இங்க வாடே, பேசினது நானூறு. இப்பம் வித்தை வேற பேரனுக்குக் காட்டல. சாமி காரியம் நீயே பார்த்துக் கேளு”

“நா என்னா சொல்ல, நீங்க தர்மவான். கொடுங்க வேங்கிக்கிறேன்”.

“சரி.. இந்தா இருநூறு ரூவா. அடுத்த கொடைக்குப் பார்த்துச் செய்திடுவோம்”.

“கட்டுப்படியாவாது மொதலாளி”

“என்னடா கட்டுப்படி ஆவாது. கண்ணம்மாவுக்கு எல்லாத்துக்குமா சேர்த்தே ஐநூறுதான். அந்த ‘எல்லாத்துக்குமா’ விற்குக் கொஞ்சம் கூடுதல் அழுத்தம் கொடுத்துச் சொன்னது அவனுக்குப் புரிந்தது. சரிதான் சத்தங்காட்டாம வேங்கிட்டுப் போ.. ஆமா”

பகைத்துக் கொள்ள முடியாது. . பணத்தை வாங்கி இடுப்பு வேட்டியில் முடிந்து கொண்டு தள்ளாடியபடி நடந்தவன் காதில்,

“லே, மிச்ச சீமெண்ணைய் பாட்டில ஆச்சிட்ட கொடுத்திட்டயா” என்ற தர்மகர்த்தாவின் உரத்த குரல் கேட்டது.

# பகல் வேஷங்கள்

‘**வ**ரவர தெருவில் நடக்கவே முடியல சார். ஒரே அசிங்கக் காடா இருக்கு. என்னதான் இந்தக் கார்ப்பரேஷனில வேலை செய்யறாங்களோ’. ஆதங்கப்பட்டுக் குறை சொல்லிய மனிதர் ஒரு கையில் பிடித்திருந்த வெள்ளைச் சடைநாய் டாமி இயற்கை அழைப்பை முடித்துக் கொள்ள அலை பாய்ந்து கொண்டிருந்தது. மறு கையில் பிடித்திருந்த கருப்புக் குப்பைப் பையை அலட்சியமாகச் சுழற்றிக் குப்பைத் தொட்டியில் வீச, அது தொட்டிக்கு வெளியே விழுந்து சிதற,

‘தினம் மெயிட் போட்டுறும். அவ இன்னிக்கு வரல’ என்றார்.

‘நான் உங்களை எதுவும் கேட்கலையே சார்’.

‘வாங்க சார் எங்க வீட்டுக்கு. ஒரு காபி சாப்பிடலாம்’.

வீட்டில் நுழைந்தவர், 'டேய் முருகேசா, சாயங்காலம் வீட்டுக்கு போறதுக்குமுன்ன அப்பாவுக்கு டயபர் மாட்டி விட்டுட்டு போயிடு. எனக்கு ஆபீஸ் முடிந்து கிளப் ஆண்டு விழாவுக்குப் போகணும். ராத்திரி வர பத்துக்கு மேல ஆகிடும்'.

காபி வரத் தாமதமாகியது. கிளம்ப எத்தனிக்கும் போது, 'ஒரு நிமிஷம் சார். நீங்க பேப்பர் பாருங்க, நான் அதுக்குள்ள ஷேவ் பண்ணிக்கிட்டு உங்களோட காபி சாப்பிடறேன்'. சப்தம் வந்த திசையில் வாஷ் பேசனில் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்க அவர் அதுபற்றிச் சிந்தனை இல்லாமல் முகச்சவரத்தில் முகத்தை வித விதமாக திருப்பியபடி மூழ்கியிருந்தார்.

'சார், உங்களுக்கு மெட்ரோ வாட்டர் வருதா?'

'கொஞ்சமா வருது. எங்களுக்குக் குடிக்க தாராளமாகப் போதும்'

'அட, என்னங்க குடிக்க மெட்ரோ வாட்டரா? நம்ம வீட்டில் செடிங்களுக்கும், துணி துவைக்கவும்தான். இப்ப தண்ணி இல்லாம செடிங்க வாடுது. மனசுக்கு வேதனையா இருக்கு'என்று வள்ளலாராக மாறியவர்,

'தண்ணிய ஜனங்க நிறைய வேஸ்ட் பண்ணறாங்க சார். நான் நூத்தம்பது அடி போர் போட்டு சப் மெர்சிபிள் போட்டிருக்கேன். கொஞ்சம் உப்பா இருக்கும். அக்கம் பக்கத்தில கேட்டா ஒரு குடம் கூடத் தர மாட்டேன். வேஸ்ட் பண்ணுவாங்க'.

'பேப்பர்ல என்ன சார் செய்தி? எல்லாத்திலும் ஒரே பொய்யும் புனைச்சுருட்டும். எங்க பாருங்க ஒரே லஞ்சம். நேர்மையானவங்க ரொம்ப அருகிப் போய்ட்டாங்க சார். வார்த்தைச் சுத்தம் இல்லை. நாடு எப்படிச் சார் உருப்படும்?

'என்ன சார். இன்னிக்கு ஆபீஸ் போகலியா? ரொம்ப ஃப்ரீயா

இருக்கிறாப்போல தெரிகிறது என்ற என்னிடம்,

‘ஒரு பத்துநாள் மெடிக்கல் லீவு போட்டிருக்கேன். மதுரையில் மச்சான் பேத்திக்குக் காதுகுத்து.. போகணும். ஆடிட், பட்ஜெட் அப்படி எதாவது வரும். இரண்டு நாளு லீவு தர மாட்டாங்க. அதால மெடிக்கல் லீவைத் தட்டி விட்டுட்டேன். டாக்டர் சர்டிபிகேட் தான் நூறு ரூபாய்க்கு கிடைக்கிறதே. என்ன ஒண்ணு சீட்ல பத்து நா இல்லாமல் போனா மேல் வரும்படி போயிடும்’’.

காபி இன்னும் வரவில்லை. எனக்கு நிறைய வேலை இருந்தது.

‘அப்ப இன்னோரு நாளு வரேன் சார்’

‘காபி சாப்பிடாம போகறீங்க. பரவாயில்லை. அடுத்த வாட்டி வரும் போது கண்டிப்பாக சாப்பிடணும்’.

வாஷ் பேசன் குழாயில் நிறுத்தப்படாத நல்லியிலிருந்து களக் களக் என்று தண்ணீர் ஒடும் சத்தம் காதில் இன்னும் விழுந்தபடி இருந்தது.

**– வெ.சுப்ரமணியன்** **கோயம்பேடு, சென்னை**




# மகிழினி காந்தன்

**சுவிட்சர்லாந்து**


## மகிழ்....

நீங்கள் தூக்கி வீசியது
மெழுகு வர்த்தியை
என்பது
அதை எடுத்தவன்
ஒளி பெறும் போதுதான்
புரியும் !

**சிந்திக்க...**



# துதிப்போம்

தூய தேவனைத் தூய இடத்தினில்
துதித்துப் பாடிடுவோம் – அவர்
வல்லமை விளங்கும்
வான விரிவைப் பார்த்தே
துதித்திடுவோம்

தேவ வல்லமை தேவ செயல்கள்
தேவ மாட்சிமை தேவ மகத்துவம்
தேவனுக்கென்றே துதிப்போம்
தேவ தேசத்துக்கென்றே துதிப்போம்

எக்காளத்தோடும் வீணையோடும்
கைத்தாளத்தோடும் ஓசையோடும்
குழலும் யாழும் இசைக்க –நாம்
நடனமாடியே துதிப்போம்
(தேவ வல்லமை...)

சுந்தர உலகினில் வாசம் செய்து
சுவாசம் செய்யும் உயிர்கள் யாவும்
அர்த்தமுள்ள ஜெபம் செய்து
கர்த்தரைத் துதித்திட வேண்டும்
(தேவ வல்லமை....)



# தமிழ் மொழி

அகத்தின் மொழியாய் எழுந்து ஒளிர்ந்த
இகத்தின் பழைமை செம்மொழி உயர்க!
அகக்கண் திறக்க அழகாய் உதவும்
சுகந்த மொழியே சிறந்து வளர்க!

அகண்ட தீபமாய் அவனியில் ஒளிரும்
தகமைத் தமிழே தண்மை பெறுக!
அகரம் தொடங்கி னகரம் வரையில்
திகட்டா எழுத்துடைத் திரவியமே வெல்க!

அகராதி வகைகளை அகத்தே அமைத்த
நிகரில்லாத் தமிழே நீடூழி நிலைக்க!
அகவிருள் நீக்கும் அணியுடை இலக்கியம்
நுகர அளித்த நூலகமே தொடர்க!

அகிலம் போற்றும் குறளினை அளித்து
மகிழ வைத்த மதுரமே மணக்க!
அணிகள் அணிந்து அழகைக் கூட்டும்
மணித்தமிழ் அழகே மங்காது எழுக!

# நான் ...

இயல்பாய் இருப்பதாய்த்தான்
நினைத்துக் கொண்டிருக்கிறேன்..
அயலிடம் அநீதி அடைகையிலென்னவோ
விழிகள் பெருத்து
நாக்கு நீண்டுவிடுகிறது...
உயிர்கள் இம்சை காண்கையில்
உணர்வில் அழுத்தி
சிலுவை தூக்கிச் சுமக்கிறது மனசு..
கயிறுகளால் கட்டப்படும் கணங்களில்
என்னைக் கட்டுப்படுத்த முடியாமல்
அறுத்துக் கொள்ளக்
கத்தி தீட்டுகிறேன்..
குயிலிசைக்குள் மூழ்கி
குழல்களுக்குத் துளையிட்டு
காற்றை அவைகளில் செலுத்துகிறேன்..
துயிலும் உடலங்கள்
துறந்த ஆன்மாக்களுக்கு
நித்திய வழி செதுக்க நினைக்கிறேன்..
பயின்றவை ஒன்று பழகியவை ஒன்று
இரண்டையும் முறுக்கித் திரி செய்கிறேன்..
வயிற்றுப் பசியுணர்ந்தும்
வளங்கள் உறைபடர்ந்தும்
நொடிகளை மணிகளாக்கிக் காய்கிறேன்..
இப்படித்தான் நான் இதுதான் நானென்று

இலக்கண வரையறை சொல்ல
உலகம் விட்டதில்லை..
எப்படி மாறுவேனென்று
எனக்கும் தெரியவில்லை..

# ஒத்தையில் ஏன் நிற்கிறாயோ...



அத்தை மகளே ரத்தினமே !
இத்தனை காலம் எங்கிருந்தாய்
உத்தமி உனைக் கண்டு
எத்தனை காலம் ஆச்சுதடி !

கத்தரி வெயிலிலே
குதிச்சு நீ நடக்கையிலே
கொத்துக் கொத்தாய்ச் சித்திரப்பூ
சுத்த நெஞ்சில் மலருதடி !

சொத்தெல்லாம் உனக்கெழுதி
தித்திப்பு வாழ்க்கை வாழ்ந்து
பத்துப் பிள்ளைக்கு அப்பான்னு
பெத்துப் போட்டு வாழணுமே !

முத்துப்போல் பல்லழகி
மெத்தான உடலழகி
அத்தை மகன் நானிருக்க
ஒத்தையில் ஏன் நிக்கறயோ !

# அழகு நிலா (சிறுவர் பாடல்)



அழகு நிலா வானிலே
ஆசை காட்டி மயக்குது!

இரவில் மட்டும் தெரியுது!
ஈர்க்குது! இழுக்குது!

உலகுக்கெல்லாம் ஒரு நிலா!
ஊரைச் சுற்றி வருகுது!

எல்லாருக்கும் பிடிக்குது!
ஏனோ அங்கே இருக்குது!

ஐ உலகம் வியக்குது!

ஒரு நாளில் மறையுது!
ஓர் அலகாய் வளருது!

ஔவை அங்கே இருப்பதாய்
அஃதே காட்டி நிற்குது!

# கடைசிக்குரல்

அலை பேசியின் அடுத்த முனையில் பேசியது அவன் தான்...என் தம்பி. "அக்கா அப்பா அறிவு நினைவின்றி இருக்கிறார்.. டாக்டர் கையை விரிச்சுட்டார்.." அவன் குரலும் உடைந்திருந்தது.

அப்பா... ஆளுமையின் சிகரம்... அன்பின் பேருலகம்... கலைகளின் களஞ்சியம்... ஏன் கோபக்கலசமும் கூட...

சமீப காலத்தில் விசித்திரம் சற்றே கலந்தது போல் சாயலும் பேச்சும்.. அவரிடம்.

விடுமுறையில் குழந்தைகளோடு வீட்டுக்கு வந்தவளை "ஏன் வந்தாய் போ.." என்ற கணம் அவராய் அவரில்லைத்தான்...

கோபத்தில் நறுக்கென்று திட்டிவிட்டு விறுக்கென்று திரும்பி வீட்டுக்கு வந்த பின் விசாரித்ததில்லை அவரை...

வயோதிபம் மாற்றியும் மாறியும் இருந்த மனதில் திடீர்

திடீரென இப்படித்தான் ஏசியிருக்கிறாராம்..

மனதில் எப்போதோ மயக்கிவிட்ட கோளாறு இப்போது விழித்திருக்கிறது.. இதை அறியாமல் விலக்கி வைத்திருக்கிறேன்..

அவரது கோபத்துக்கீடாய்..

ச்சே..என்ன மனம் எனக்கு.. அவர்மீது பாசம் வானமளவு இருந்தும் நடித்துக் கொண்டு வருத்திக் கொண்டிருந்தேன் என்னையும்..

கண்ணீர்க் குளத்தில் வார்த்தைகள் மூழ்கிற்று. ‘‘அப்பா காதில் போனை வை நான் பேசணும்’’ என்றேன்.

வைத்திருப்பான் போலும்..

அப்பா.... அப்பா... நான் உங்க மக கேட்குதாப்பா.. கேட்குதா.. நான் ஏதாவது தப்பா செய்திருந்தா.. பேசிருந்தா மன்னிச்சிருங்கப்பா..என்றழுதேன்...

‘‘அக்கா! அப்பா கண்கள் மேல் குத்தி இருந்திச்சு.. உன் குரல் கேட்டதும் போயிட்டாருக்கா ...’’ அழ ஆரம்பித்தான் தம்பி.

அப்பா இல்லாத வீட்டுக்குள் அடி எடுத்து வைக்க அதிர்ந்த மனசுக்குள் ஒரே ஆறுதல், நான் அவரிடம் கடைசியாய்க் கேட்ட மன்னிப்புத்தான்.

# மின்மினிகள்

கோவில் படி
கேட்டுக் கொண்டிருந்தது
காதல் பாடம்

சோக முகம்
சிரித்துக் கொண்டிருக்கிறது
எதிரி அகம்

நிறை நிலா
வீதியில் இறங்குகிறது
வெளிச்சம்

மூலையில் கலப்பை
வெடித்துக் கிடக்கிறது
வயல் வெளி

கையில் சோறு
காணாமல் போகிறது
குருவிகளின் பசி

சிறகை விரித்து
முழுச்சூரியனை விழுங்குகிறது
பறவை

# அழகுராஜா

**எ**ப்பப் பார்த்தாலும் அந்த அம்முக் குட்டியத்தான் எல்லாருக்கும் பிடிக்குது. தூக்கி வச்சுக்கிறாங்க, கொஞ்சுறாங்க, மிட்டாய் கொடுக்கிறாங்க, கன்னத்தக் கிள்ளளுறாங்க.

அம்முக்குட்டியும் வெள்ளை வெளேர்னு குண்டுக் கன்னத்தோட அழகா மொழு மொழுன்னுதான் இருக்கும். ஆனா அவளயே எல்லாரும் மொய்க்கிறது எனக்கும் பிடிக்கல. அதான் நல்லா கிள்ளி வச்சுட்டேன். அதுக்குப்போயி அம்மா என்னய அடிச்சுட்டாங்க.

அம்மா கூட அம்முக்குட்டியத்தான் தூக்கி வச்சுக்குவாங்க. என்னய தூக்கச்சொன்னாலும், “நீ வளர்ந்தாச்சு இனி தூக்க முடியாதுடா” என்பாங்க. எனக்கு கெட்ட கோபமும் அழுகையும் வரும்.

அம்மு வந்தப்புறம்தான் என்னயக் கண்டுக்கிறதில்ல.

அம்முவால்தான் எல்லாம்.

அதான் இன்னிக்கு நல்லா அவள கிள்ளிட்டேன்.

அம்மா அடி அடின்னு அடிச்சிட்டாங்க. அம்மா கூட டூ போட்டுட்டு வீட்ட விட்டு ஓடியாந்துட்டேன். சனியன் இந்தக்கண்ணீர் மட்டும் நிக்கவே மாட்டேங்குது.

நான் போகும் வழி ஏதோ காடு மாதிரி இருக்கு.பரவால்ல வீட்ல தேடுறாங்களான்னு பார்ப்பம். அவுங்கல்லாம் தேட மாட்டாங்க. அவுங்களுக்கு அந்த சனி அம்முவத்தானே பிடிக்கும். என்று மனதில் நினைத்த அழகுராஜாவை ஓர் உருவம் பின் தொடர்ந்ததை அவன் அறியவில்லை.



அழகுராஜா அழுது கொண்டே போன போது ஒரு அழகிய குளத்தைக் கண்டான். அது குளம் என்றெல்லாம் அவனுக்குத்

தெரியாது. தண்ணீரில் பூத்திருந்த அழகிய தாமரை மலர்கள் செக்கச் செவேல்னு கண்ணைக் கொள்ளையடித்தது. அவனுக்கு அழுகை மறந்து போயிற்று. பூவைப் பறிக்கலாம் என்று குளத்தில் இறங்கி விட்டான்.

அப்போதுதான் மழை பெய்து நீர் நிறைந்திருந்தது குளம். முதலைகள் கூட இருக்கலாம். சின்னப்பையனுக்கு எதுவும் தெரியவில்லை. அவன் அழுகை மறந்து சிரித்துக்கொண்டே பூப்பறிக்கக் குளத்தில் இறங்கிவிட்டான். பூக்கள் குளத்தின் மத்தியில் மிதந்தன. வேகமாய் முன்னேற முன்னேற திடீர் என்று ஆழத்துள் அமிழ்ந்து போனான். மூச்சுக்குள் தண்ணீர் புகுந்து திக்கு முக்காடினான். அப்போது யாரோ தன்னைத் தொட்டிழுப்பது போல் உணர்ந்தான். யார் அது?

தொட்டு இழுத்ததை உணர முடிந்தாலும் யாரென்று அறிய முடியாதபடி மயக்கம் வந்தது அழகுராஜாவுக்கு. கண்விழித்த போது கட்டிலில் படுத்திருந்தான்.

“ஒருவேளை கனவு கண்டேனோ” என்று நினைத்த நொடியில் இல்லை என்பதை அருகில் கிடந்த செந்தாமரைப் பூக்கள் உணர்த்தின.

அப்போது அங்கே அவன் மாமா வந்தார்.

“முழிச்சுக்கிட்டியா” என்றவாறே பூக்களைக் கையில் திணித்தார்.

சிரித்துக் கொண்டே வாங்கிக் கொண்டான் அழகுராஜா.

“ஏன்பா அழுதுட்டே காட்டுப் பக்கமா ஓடினே.. நான் வரலன்னா என்னாகிருக்கும் ம்....” என்றார் மாமா.

அழகுராஜாவுக்கு அழுகை பீறிட்டது. பொய் சொல்லத் தெரியவில்லை அவனுக்கு.

அம்முக்குட்டியைக் கிள்ளிய கதையை மாமா விடம் சொல்லிட்டான்.

“ஏன் மாமா அம்முவத்தானே உங்களுக்கும் பிடிக்கும் இல்லியா” என்றான்.

மாமா அவனை அணைத்துக் கொண்டார். “அது அப்டி இல்லப்பா, அம்முவோட காலைப் பார்த்தியா சூம்பிப்போய் கிடக்கு, அவளால நடக்க முடியாதுப்பா, எல்லா இடத்துக்கும் நீ ஓடிப்போயிடுவே, அவள நாம தானே தூக்கிட்டுப்போகணும், நம்மள விட்டா யாரிருக்கா, உன் தங்கச்சிப் பாப்பாவ நீதானே நல்லாப் பார்த்துக்கிடணும்” என்றார்.

அழகுராஜாவுக்கு அவர் சொன்னது எல்லாம் புரியாவிட்டாலும் அம்முக்குட்டியால் நடக்க முடியாது என்பது மட்டும் புரிந்தது. ஓடிச்சென்று அம்முவைத் தானும் தூக்க முயன்றான்.

“டேய் டேய் பார்த்துடா பாப்பா வுழுந்துடப்போகுது “

என்ற அம்மாவின் குரலை அவன் காதில் விழுத்தவேயில்லை!

# என்னோடு கலந்து விடு

என்னவன் என்கின்ற எண்ணம் – எளிதில்
ஏற்படும் வகையில் அன்பைக் கொடு!

இன்பத்தில் பாதியை எடுத்து – இதயத்
துன்பத்தில் பாதியைக் குறைத்து விடு!

கன்னக் குழியினில் விழுந்து – கவிதைக்
காவிய முத்துக்கள் ஒளிரவிடு!

சென்னியில் சூடிடப் பூவை – செடிகள்
துடித்திடா வகைமையில் வாங்கிக்கொடு!

தொன்மை மரபுகள் சேர்த்து – தொழும்
தன்மைத்தாய் வந்து பெண்ணைக் கேளு!

பன்மடங்கு பெருகிய காதல் – பரந்து
பரவைக் கடலாகிட வைத்து விடு!

பொன்வைக்கும் இடத்தில் பூவை – வைத்துப்
புன்னகைத்து என்னோடு கலந்து விடு!

# நெகிழிக்கரண்டி மயில்




**தேவையானவை:**

- காது துடைக்கும் பஞ்சுக்குச்சி (Ear Buds)
- அட்டை (Cardboard)
- நெகிழித்தேநீர்க்கரண்டிகள்–17
- சிறிய தங்கநிறத் துணி
- அல்லது பொன்நிறத்தாள்
- பசை (Glue)
- நீலம், பச்சை, மஞ்சள், செம்மஞ்சள் வண்ணங்கள்



16 கரண்டிகளை படத்தில் காட்டியவாறு பச்சை நீலம் மஞ்சள் நிறங்களை உங்கள் ரசனைக்கேற்ப தோகைபோல் தீட்ட வேண்டும். பின் காய வைக்க வேண்டும்.

படத்தில் காட்டியவாறு அட்டையில் ஒரு வட்டமும் ஒரு மயிலின் முன் பகுதியும் வரைந்து வெட்டிக் கொள்ள வேண்டும்.




மயிலின் முகத்தில் ஒரு கரண்டியின் குவிவுப் பாகத்தை வெட்டி ஒட்ட வேண்டும்.

அதன் மேல் நீலநிற வண்ணம் கொடுத்து ஒரு கறுப்புப் பாசியைக் கண் பகுதியில் ஒட்ட வேண்டும்.

அலகுக்கு செம்மஞ்சள் நிறம் தீட்டலாம்.



மயிலின் கொண்டைக்கு 6 காது துடைக்கும் பஞ்சுக்குச்சி (ear buds) எடுத்து ஒரு பக்கத்தின் பஞ்சுப் பகுதியை அகற்றி விட வேண்டும்.

இப்போது இருக்கும் ஒரு பக்கப் பஞ்சுக்கு நீலமும், அதன் தண்டுக்கு செம்மஞ்சளும் தீட்ட வேண்டும்.

காய்ந்ததும் அவற்றைத் தலைப் பகுதியில் பின்புறம் வைத்து

ஒட்ட வேண்டும்.

இனி காது துடைக்கும் பஞ்சுக்குச்சியின் (ear buds) பஞ்சுப் பகுதியை சிறிது தண்டோடு வெட்டி நீல வண்ணமேற்றிக் காய்ந்ததும் அட்டையின் முகப்பகுதியுள்ள உடல் முழுவதும் ஒட்ட வேண்டும்.



பின் வெட்டிய வட்ட அட்டையில் தங்கநிறத்துணி அல்லது தாளை ஒட்டி அட்டை தெரியாமல் மூட வேண்டும். பின் அதன் மேல் வண்ணம் தீட்டிய நெகிழித் தேநீர்க்கரண்டிகளை அரை வட்டமாக தோகைபோல் ஒட்ட வேண்டும்.

கரண்டிகளின் பின் முனைகளை மறைக்கும் வகையில் மயிலின் முன் முகப் பகுதியை வைத்து ஒட்ட வேண்டும்.

நெகிழிக்கரண்டி மயில் இப்போது தயார் .

சுவரில் மாட்டுவதற்கு ஏற்றாற் போல் பின் புறத்தில் ஒரு தடிப்பான நூலின் இரு முனைகளையும் ஒருங்கே வைத்து ஒட்டினால் போதும். ஆணியில் மாட்ட அது உதவும். செய்து பாருங்கள் ரொம்ப அழகு.

# சிலந்திகளின் வலைகள்

பாதிக்கிணறு தாண்டியவுடன்
பிரமிப்பில் பயங்கரமாய்ச்
சிரித்தேன்...
கைப்பிடித்திருந்த
மரத்தின் வேர்
அப்போதுதான்
பலமிழக்க வேண்டுமா...
அடித்தளத்தில்
அடிபடாமல் மீண்டும் நான்...
ஏறுவதற்கு இன்னொரு
ஏணியைப் பின்னும் பலத்தில்
மனத்தை தேற்றுகிறேன்...
அங்கிருந்த
சிலந்திகளின் வலைகள்
சிந்திக்கவே வைத்திருக்கின்றன..

**– மகிழினி காந்தன்** சுவிட்சர்லாந்து



## ரா.த.ஜீவித்தா

**திண்டுக்கல்**

# ஜீவிதங்கள்

சோடிமாட்ட ஏரு பூட்டி
கழனியில நீயும் கால வைக்க..
நெஞ்செல்லாம் உனை ஏந்தி தறிக்கட்டையில
நானும் கைய வச்சேன்..

பாத்துப் பாத்து பக்குவமா
தறியில நூலக் கோர்க்க..
பூத்துப் பூத்து நிக்குதய்யா
தறி கெட்ட உன் நினப்பு..

பச்ச நூலு சீல நானும் நெய்யும் வேள..
பாவக்கா பொட்டலுல
பாசாங்குபண்ணி நீ கொடுத்த
பரிசமுத்தம் இனிக்குதய்யா..

சிவப்பு நூலு சீல நானும் நெய்யும் வேள..
சீமக்காட்டுக்குள் நீ வைச்சுவிட்ட
குங்குமம் மணம் வீசுதய்யா..
பருத்தி நூலு சீல நானும் நெய்யும் வேள..

பருத்திக்காட்டுல நீ மாட்டி விட்ட
பவளக்கொலுசும் சிணுங்குதய்யா..

கூறப்பட்டுச் சீல நானும் நெய்யும் வேள..
கூடிவாழும் ஆசையெல்லாம் கலையுமுன்ன
குறிகாரன் சொன்ன சத்தங் கேட்டதய்யா..

வெள்ள நூலு சீல நானும் நெய்யும் வேள..
விதச்ச வித நெல்லும்
முளைக்காமப் போச்சுதுன்னு..
கன்னி இவ கைப்புடிக்க
வழியில்லாமப் போனதெண்ணி
விஷத்த நீயும் குடிச்சதேனய்யா..

நித்தமும் உன்னை நினைச்சு
வாழ்ந்த நெசவுக்காரி என்ன
தறிக்கட்டையோடயே புதச்சதேனய்யா..

இன்னொரு சென்மம்
நாம எடுத்து வரோணும்
அப்பவாச்சும்..நீயும் நானும்
பறிகொடுத்த ஆசையெல்லாம்
கழனியும் தறியும் நிறவேத்தோணுமய்யா..

# பழமையை மீட்போம்

இன்று குளிரூட்டப்பட்ட அறைக்குள் லாவகமான
தனிமை நிலை ஏற்படுத்திக்கொண்டு
நவீன தொழில் நுட்பத்தின் உதவியுடன்....
விலையுயர்ந்த உதவிப்பொருள்களோடு
வானவில்லில் கூட
இல்லா நிறத்தைத் திரட்டி
அர்த்தமே இல்லாமால்
வெள்ளைக் காகிதத்தின் மேல் சிதறச்செய்து
“மார்டன் ஆர்ட்” என்ற பெயரில்
லட்சத்திலும் கோடியிலும் ஏலமிட்டுக்
குதூகலித்துக் கொண்டாடி..
தன் ரசனைகளையும் திறமைகளையும்
தீர்த்துக்கொள்ளும்
இன்றைய இளைய தலைமுறையே.....
இதுவா உன் படைத்தல் திறன்...??

பகலவனின் ஒளிக்கீற்றும் நுழையாத
புற்களும் படர இயலாப்
பாறைகளின் நடுவே
மூச்சுக்காற்றுக்கும்
முன் இருப்பதைக் காணக்கூட
வழியில்லா இருட்டிலும்
ஆடையில்லா அரைமனிதனாக

அறிவியல் அறியா
ஆதிவாசியான வாழ்க்கையில்
தான் வாழ்ந்ததின் சுவடுகளைத்
தற்காத்துக் கொள்ளவும்
அடுத்த தலைமுறையின் வாழ்வியலுக்காகவும்
வலிமைகொண்ட பாறையைக்
கைவிரல் நகம் கொண்டு கீறி..
கற்களால் குத்திக் குடைந்து
காயம் கொண்டு
வார்த்தைகளே இல்லாக் காலத்தில்
காலநிலை மாற்றத்திலும்
கரையாத அழியாத வண்ணங்களைப் பூசி...
உலகின் அத்தனை ஆராய்ச்சியாளர்களையும்
வியப்பிற்குள்ளாக்கி எடுத்துரைத்தனர்
நம் பண்டைய கால முன்னோர்கள்.
இன்றும் விடை கிடைக்கவில்லை
அவர்களின் படைப்புகளில்
பதிக்கப்பட்ட ஓவியங்களுக்கு
உணருங்கள் உணர்த்திடுங்கள்
பாரம்பரியங்களை.

# மீதகாலம்

அரக்கப்பரக்க பின்னங்கால் பிடரியில் முட்டும் வேகத்தில் ஓடிச்சென்று, முட்டி மோதி முன்னேறி, ஒரு இருக்கையைத் தேடிப் பிடித்து, பெருமூச்சுவிட்டு அமர்ந்தபடி பயணச்சீட்டுக் கொடுக்க வந்த நடத்துநரிடம் இறங்கும் இடம் சொல்லி, சீட்டைப் பெற்றுக் கைப் பையினுள் பத்திரப் படுத்திவிட்டு, மீதிச் சில்லறைக்காக கழுத்தைத் திருப்ப, தருகிறேன் என்ற செய்கையைக்கண்டு திரும்பும் போது..

என்னை உற்றுக்கவனித்துப் பல் இளித்த முப்பதுகளைக் கடந்தவனின் மீது.. அருவருப்புப் பார்வையை வீசிவிட்டு,

நகரும் பேருந்தின் சாளரம் வழியே வேகமாகப் பின்னோக்கி ஓடத்துவங்கிய மரங்களின் அசைவின் மூலம், என்னைத் தேடிவந்து கன்னம் உரசிக் காதணியை குலுங்கச் செய்த தென்றலை ஸ்பரிசித்தபடியே ..

மெல்லிய ஓசையில் பேருந்தில் ஒலித்துக் கொண்டிருந்த பாடலைச் சத்தமின்றி முணுமுணுத்துக்கொண்டு, எப்பொழுதும் மறவாமல் என்னைப் பின்தொடரும் ஒன்றைத் தேடத் துவங்கியது மனம்....

வானுயர்ந்து நிற்கும் கட்டிடங்களின் விளக்கொளிகளைத் தாண்டி, என் கண்ணின் முன்தோன்றிடும்...

சாலையோரம் என் வரவிற்காக ஒற்றைக்காலில் தவம் கிடக்கும் மரத்தின் கிளைகளின் தடையைத் தாண்டி என்னைத் தூர நின்றே ரசிக்கும்... என்னைக் காணும் ஆசையில் சில நாட்கள் உடல் பெருத்தும் சில நாட்கள் உடல் மெலிந்தும் சில நாட்கள் முழுமையான பூரிப்புடனும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.... இன்று ஏனோ ஸ்பரிசிக்கும் தென்றலும் என்னைச்சுடுகிறது... ரசிக்கும் இசையும் இம்சிக்கிறது.. கட்டிடங்களின் ஒளிவிளக்கு கண்ணைக்கூசுகின்றது ..

மரக்கிளையில் உதிரும் சருகுகளின் தூசுகளால் என் கண்கள் கலங்குகின்றன..

ஆனாலும் அதைத் தேடிக்கொண்டே பயணிக்கின்றன விழிகள். மீதிச்சில்லறையும் கைகளில் கிடைத்தது. இறங்கும் இடம் வந்தது. உடல் மட்டும் இறங்கத் தயாரானது. மனதைப் பேருந்துச் சாளரத்தில் கட்டிவிட்டு.. பின் இருக்கையில் இருந்த ஒருகுரல் ஒலித்தது அழுத குழந்தையிடம், “இன்று அமாவாசையடா நிலா வராது நீ சாப்பிடு நாளைக்கு வரும்” என்று. கட்டியமனதை அவிழ்த்துக்கொண்டு இறங்கினேன் .... நிச்சயம் நாளை என்னைத் தேடி மீண்டும் வரும் என்ற ஆவலோடு.....

**– ரா.த.ஜீவித்தா திண்டுக்கல்**




# செ. செல்வமணி செந்தில்

**பல்லாவரம்**


## துளிப்பாக்கள்

நீ இல்லா நேரம்
துணையிருக்கிறது
அலைபேசி.

லட்சங்களில் பறக்கின்றன
கல்லூரி வானில்
பட்டங்கள்.

நீளும் கரங்கள்
நெருங்க முடியவில்லை
சாதியம்.

சாரல் மழை
எதிர்பார்க்கவே இல்லை
பள்ளி விடுமுறை.

கொளுத்தும் வெயில்
குறையவேயில்லை
விலைவாசி.

கடுமையான குளிர்
ஆவி பறக்கிறது
மசால் வடை.

சிதறும் நீர்
செழுமையடைகிறது
இயற்கை.

கொளுத்தும் வெயில்
இதமாக இருக்கிறது
பழைய சோறு.

கட்டிய விறகு
அறுந்து விழுகிறது
தேய்ந்த செருப்பு.

நல்ல மழை
நிறைவேற்றப்படுகிறது
உயிரின் பசி.

நல்ல விலைதான்
கொடுக்க மனமில்லை
அப்பாவின் சைக்கிள்.

**– செ. செல்வமணி செந்தில்** பல்லாவரம்



**மகா**

**நாச்சியார் கோவில்**

# உயிர்அறை

உன் குருதியைக்
குடைந்து தோன்றுகிறேன் நான்
தனிச்சையாக்கப்படுகிறாய்
நான் கலந்ததால் நீ..

உன்னை முட்டி
மோதிக்கொண்டே இருக்கிறேன்
நான் அதிக வலிமை கொள்ள...

ஏற்கனவே உனக்குள்
தேக்கி வைத்த வலிமையை
இழக்கிறாய் நீ என்னிடம்...
நடுநிசி நேரங்களில்
வெடுக்கென வலித்திடச்
செய்கிறேன் உன் பாகங்களை
என் அத்தனை பாகங்களையும்
ஆரோக்கியமாய் நான் வளர்த்துக்கொள்ள...

விழுக்காடுகளில் உன் உயிரை
உறிஞ்சிக்கொள்கிறேன்
ஒவ்வொரு திங்களுக்கும்...
கொஞ்சம் கொஞ்சமாய் நான்
உன்னிடமிருந்து
உயிர் பெற்றுக்கொள்ள...

அதிகரிக்கும் என் பாரத்தை
உன் மடியில் கிடத்திவிடுகிறேன்
இலகுவாக நான் நகர்ந்துக்கொள்ள...


உன் சுவாசத்தைக் கடினமாக்கி
கனமாய் இரைச்சல் தருகிறேன்...
என் சுவாசமும் அதில் இருந்துதான்
என்று ஆனபின்பு...

எனக்கு நீ போதுமென்ற பொழுதில்
உன் உயிரைக் கிழிக்க...
“அ” எனக் கதறுகிறாய்..
“ம்” எனச் சொல்லி
மருத்துவர் எனை வரவேற்க..
“மா” எனச் சப்தம் கேட்க
உன்னை வகுத்து
வெளிவந்து விடுகிறேன் நான்
“அம்மா”

# விடியலை வரவேற்கும் வடிவமைப்புக்கள்









– மகா நாச்சியார் கோவில்



# அகிலா ராமன்

திருச்சி

## உதகை ராணி

மலை ராணியின் கூந்தல்
அலங்காரத்துக்குக்
காலங் காலமாகக் காத்திருக்கும்
கொண்டை ஊசி வளைவுகள்..
அழகுக் கூந்தலில்
அவள் சூடிக்கொள்ளத்
தவம் இருக்கும் வண்ண மலர்கள்..

மங்கையவள் கால்பதிக்க
ராஜபாட்டையாய் விரியும் பச்சைப் புல்வெளிகள்..

அரசகுமாரிக்குக் கவரி வீசிப் பன்னீர் தூவ
தென்றல் காற்றும் சாரல் துளிகளும்..
போர்த்திக்கொண்டு உறங்கப்
பனிப்போர்வை காத்திருக்க..
முகம் துடைக்க மேகங்கள்
தாதிப் பெண்ணாய்க் காத்திருக்க..
வீற்றிக்கிறாள் உதகை ராணி
வருபவர்களைத் தன்
தண்கரங்களால் அணைத்துகொள்ள!!!

# நாட்டுப்புறப் பாடல்

அப்பனின் அன்பெனும் அடிமரம் வெட்டுப்பட்டு
காதல் தீப் பிடித்து உச்சி மரம் எரியும்
தீயிடையே மாட்டிய சிறு பறவையாய்
கருகிப்போறேன் நானும் என் மாமா !

வேர் பிடித்து வளர்ந்த நம் அன்பினைக்
கூறு போட்டது நம் உறவுப் பகை
சிறு வயதில் இருந்தே உதித்த அன்பும்
வெறும் கனவாகப் போனதே ஆசை மாமா !

பார் புகழ வளர்ந்த நம் காதலை
வேருடன் பிடுங்கிய என் அப்பனும்தான்
வேற ஆளைக் கட்டச் சொல்ல
காத்துல அகப்பட்ட தென்னங் கீத்தா
கிழிஞ்சு போச்சு மனசு

சிரிச்சிகிட்டே பாத்து முழுங்கி
முக்கா உசிர எடுத்துப்புட்ட – மீதி
ஒத்தப் பார்வை பார்த்து என் முழு உசிரையும்
கொண்டு போயேன் !

சீக்கிரமா வந்திடு ஒரு சீலையுடன்
பாக்குறேன் நானும் ஏக்கப் பார்வையோட
பாக்கு வெத்தல மாத்துற கூறைச் சீலையா?
இல்ல வாக்கரிசி போடுற கோடி சீலையானு
ஏக்கத்தோட காத்துருக்கேன்
என்ன ஏமாத்தாம வா மாமா!!

# மாற்றம்

**வி**ஜி அந்த நகரப் பேருந்தில் அமர்ந்து இருந்தாள். கும்பகோணத்தில் இருந்து திருப்பனந்தாள் போகும் பேருந்து அது. வழி எங்கும் பசுமை விரிந்து இருந்தது. கல்லூரிக்கு வந்து சென்ற சாலைதான்.

இந்த வழிப்பேருந்து ஒன்றுதான் அவள் வாழ்க்கைப் பாதையை மாற்றி, ஆச்சாரமான குடும்பத்தில் இருந்து வந்த அவளை, ஒரு பேருந்தில் நடத்துநராக இருந்த சிவாவைக் காதலித்து,பெற்றோரை மறந்து, அவனைத் திருமணம் செய்ய வைத்தது.

ஆறு வருடங்கள் ஓடிவிட்டன. கும்பகோணத்தில் இருந்து திருப்பனந்தாள் அரை மணிநேரப் பயணம்தான்.

ஆனால் குடும்பத்தினர் யாரையும் சந்திக்க முடியவில்லை. மனது விலகி இருக்கும்போது அடுத்த தெருக் கூட

நெடுந்தொலைவுதான்.

இப்போது இந்தப் பயணத்துக்குக் காரணம் அவளுக்கு ஒரு நல்ல வேலை கிடைத்து இருக்கிறது. டெபாசிட் தொகையாக மூன்று லட்சம் கேட்கிறார்கள். அவள் கணவன் கையை விரித்து விட, பெற்றவர்களிடம் கேட்கலாம் என்று வருகிறாள். தராமல் போவார்களா? இது தாத்தாவின் வீடு. தாத்தா சொத்தில் பேத்திக்கு உரிமை உண்டு. அதைச் சொல்லியாவது பணம் வாங்கி விடவேண்டும் என்று நினைத்தவாறு நிறுத்தத்தில் இறங்கி வீட்டை அடைந்தாள்.

வாசலில் ஒரு குட்டிப்பெண் எட்டிப் பார்த்தாள். அச்சு அசலாக அவளின் சின்ன வயதுப் பிம்பம் போல இருந்தாள். அவளின் மகள் கூட அவளை மாதிரி இல்லை. அண்ணன் மகளாக இருக்கும் என்று யூகித்தாள்.

பாட்டி என்று கூப்பிட்டது பொடிசு. கண்ணாடியை இறக்கிவிட்டு எட்டிப்பார்த்தது அம்மாவின் மஞ்சள் முகம்.

ஒரு நிமிடம் முகம் மாறியவள் அடுத்த நிமிடம் “வாடி இப்பதான் வழி தெரிந்ததா”என்றாள்.

விரட்டி அடிப்பார்கள் என்று நினைத்தாள். இந்த வரவேற்பு மனதை என்னவோ செய்ய, தயங்கியபடியே உள்ளே நுழைந்தாள்.

உள்ளே இருந்து ஒரு பெண் எட்டிப்பார்த்தாள். “பிரியா இவள் உன் நாத்தனார்” என்று அவளிடம் அறிமுகம் செய்துவிட்டு, “எப்படி டி இருக்க” என்றாள். “உன் வீட்டுக்காரர் உன்னை நன்றாகப் பார்த்துக்கொள்கிறாரா? எத்தனை குழந்தைகள்? எங்க தலை எழுத்து. இதை எல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது” என்றாள்.

மூவரும் பேசிக்கொண்டிருக்க, மாடியிலிருந்து இறங்கிய

அப்பா "என்ன ஒரே சத்தமா இருக்கு" என்றபடியே வந்தவர், இவளைப் பார்த்தவுடன் துணுக்கென்று நின்றுவிட்டார். அம்மாவைப் பார்த்து "எங்க வந்தாளாம்? " என்றார். "அப்பா என்னை மன்னித்து விடுங்க அப்பா! உங்களை எல்லாம் தலை குனிய வைத்து விட்டேன்" என்று அழுதவளை, "அப்படித்தான் நடக்கணும் என்று இருந்தால் யாரால் மற்ற முடியும்" என்றுவிட்டு, "போய்ச் சாப்பிடு" என்றார்.

மாலை வரை ஒரே சிரிப்பும் கும்மாளமும்தான்.

எனக்கு வேலையும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் என் குடும்பம் எனக்குக் கிடைத்துவிட்டது, அதுவே எனக்குப் போதும், அண்ணனும் வந்து விட....

கிளம்பியவளுக்கு.. வெற்றிலை, பாக்கு, புடவை குழந்தைக்குப் பணம் என்று கொடுத்து அசத்திவிட்டாள் அண்ணி. அண்ணன் வந்து பஸ் ஏற்றிவிட நிம்மதியான மனதுடன் வீட்டை அடைந்தாள் விஜி.

**– அகிலா ராமன்** திருச்சி



சிவா

புளியங்குடி

திருநெல்வேலி மாவட்டம்

# கார்மேகம்

மழையில் நனைந்த
அவளைப் போல்
எதிர்பாராத
மழைச் சாரலில்
திக்கு முக்காடி
அங்கும் இங்கும்
துள்ளிக் குதித்து
சாரலுடன்
சண்டைபிடித்து
கடைசியில்
முற்றும் நனைந்தது
அவளின்
செல்ல நாய்க் குட்டி
கார்மேகக் கூந்தல்காரி
தலை துவட்டியதால்…..

நிலவையே
இமை மூடாமல்
ரசித்துக் கொண்டிருக்கும்
உனக்கு...

என்ன சொல்லிப்
புரியவைப்பேன்..

அது கறைகள்
படிந்த நிலா!

நீ கறைகளற்ற
வெண்ணிறச்
சிறகு முளைத்த நிலா!

கடவுள் கையில்
எப்போதும் இருக்கிறது
சாத்தானின் முகமூடி



## சே.தண்டபாணி தென்றல்

**ஈரோடு மாவட்டம்**

# அவன் தனிமரமில்லை

"**எ**ன்ன சாப்டறே?"

அவளின் கேள்விக்கு என்ன சொல்வதென்று அவனுக்குத் தெரியவில்லை.இருவரும் நடுத்தர பேக்கரியில் அமர்ந்திருந்தனர். ஏதோவொரு புதிய அனுபவம் அவனுக்கு உண்டாகி இருக்க வேண்டும்.சிறிது மணித்துளிகள் யோசித்தான்.

பிறகு

"இல்ல இதுக்கு முன்னாடில்லா இப்புடி வந்ததில்ல; உனக்கு என்ன புடிக்குமோ அதையே ஆர்டர் பண்ணு?"

அனேகமாக எல்லா மேசைகளும் நிரம்பியிருந்தன. பெரும்பாலும் ஜோடிகள். ஏன் அவர்களில் சிலர் அண்ணன் தங்கையாகக் கூட இருக்கலாம். அவனும் அவளைப் போலவும் தோழன் தோழியாகக் கூட அல்லது கல்லூரியில் சக வகுப்பாக

இருக்கலாம் .

பத்து வயதுச் சிறுவன் ஒருவன் அவர்கள் இருக்கும் மேசைக்கு அருகில் வந்து “என்ன வேண்டும் அண்ணா?” என பணிவுடன் கேட்டான். அவன் முகம் வாட்டமாக இருந்தது. ஒருவேளை பள்ளிக் கனவைத் தொலைத்துவிட்டு தன் குடும்பத்தில் இருக்கும் தங்கைக்கோ தம்பிக்கோ தாய்க்கோ ஒருவாய் சாப்பாட்டுக்காக இங்கே தள்ளப்பட்டிருப்பான் போலும்.

“ரெண்டு லெமன் ஜூஸ் தம்பி” அன்பாக அவள்தான் கூறினாள். அதை ‘சரிக்கா’ என்ற சிறுவனின் பதில் ஊர்ஜிதம் செய்வதாய் இருந்தது.

அவன் இருப்பிடத்தை விட்டு சற்று முன் கிளம்பிய போது அவள்தான் தொலைபேசிக்கு அழைத்தாள். நேற்றே தான் வருவதாகச் சொல்லியிருந்தாள்.

“ஹலோ நாந்தான் பேசறேன்”.

“ம்ம் சொல்லு”

‘நா பஸ் ஸ்டாண்ட் வந்துட்டேன்; நீ எங்க இருக்க?”

“நா வந்துட்டே இருக்கேன். ஒரு ரெண்டு நிமிசத்துல வந்துருவேன்”. “ம்ம் சரி நா வெய்ட் பண்ற.”

அவன் பேருந்து நிலையத்தை நோக்கி வேகமாக நடந்தான். ரோட்டில் வாகனங்கள் புகையை உமிழ்ந்துகொண்டு தளும்பிச் சென்று கொண்டிருந்தன. அதற்குள் புகுந்து செல்ல அவனுக்குக் கொஞ்சம் கடினமாக இருந்தது. ஒரு வழியாகப் பேருந்து நிலையத்தை அடைந்துவிட்டான். சொந்த ஊரிலிருந்து சொந்தக்காரர்கள் ஊருக்கு செல்வதற்காகவோ அல்லது தன் இருப்பிடத்தை அடைவதற்காகவோ அனைவரும் தத்தமது பேருந்தைத் துழாவிக் கொண்டிருந்தனர். சிறு புத்தகங்கள்,

ஊசி,பாசி,தைலம் என விற்கும் குழந்தைத் தொழிலாளர்களுக்கு மட்டும் அந்த இடம் நிரந்தரமாக தலையில் எழுதப்பட்டிருந்தது. வறுமை வெளியில் வியர்வை சிந்தித் திரியும் இவர்கள் சட்டத்தின் கண்களுக்கு அகப்படுவதே இல்லை.அச்சட்டம் கூட தொழிற்சாலையில் பணிபுரியும் இளம் கரங்களுக்கு மட்டும் உரித்தானதாக இருக்கும் போலும். இந்த இடம் அரசாங்கத்தினுடையது அல்லவா? வகையறாக்களை அறியாத அவர்கள் வேறு எங்கு செல்வார்கள்.

அவன் அவளுக்கு மீண்டும் போன் செய்தான். இப்போது அவள் இருக்கும் இடம் தெரிந்து விட்டது. மத்தியில் இருக்கும் போக்கஸ் விளக்கிற்கு அருகாமையில் நின்று கொண்டிருந்ததை அவன் கண்டுவிட்டான்.

இவ்வளவு சாந்தமாக இருப்பவளால் எப்படி கோபமான முகத்துடன் ஒரு அப்பாவைப்போல நடந்துகொள்ள முடிந்தது.

தேவையில்லாத பிரச்சனையில் அவன் மாட்டிக் கொண்டான். சக மாணவி அவன்மீது பிணக்கு வார்த்தைகளால் எரிந்து விழுந்து கொண்டிருந்தாள்.

“நீ மட்டும் எல்லா நோட்சையும் மேம் கிட்ட இருந்து வாங்கி வெச்சுக்குவ”; “யார் கிட்டயும் சொல்லறதில்ல நாங்க என்ன இதெல்லாத்தையும் தெரியாத லூசுன்னு நெனச்சியா?” இத அப்படியே போயி ஹெச்.ஓ.டி கிட்ட சொல்ல போற அப்புறம் தெரியும்மிடு”.

சரியான சிடுமூஞ்சி அவனைத் தொடர்ந்து திட்டிக் கொண்டிருந்தாள். அவனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. காலை அதுவும் முதல் பிரிவேளையிலேயே பிரமை பிடித்து நின்றிருந்தான்.

“உனக்கு தேவைனா நீதா கேட்டு வாங்கணும்..!”. “யார்கிட்ட

வேணாலும் சொல்லிக்க நானும் வந்து சொல்றேன்''. அதற்கு மேல் அந்த சிடுமூஞ்சி அந்த இடத்தில் நிற்கவில்லை. பதட்டம் ஆட்கொண்ட மனநிலையிலிருந்து மெல்ல விடுபட்டு தேங்க்ஸ் என்றான். “அத நீயே வெச்சுக்கோ?'' இந்த மறுப்புதான் பின்பு அவளின் நட்பைப் பெற வைத்தது.

சிறிது காலத்திலே ஒரு தாயும் அவளுக்குள் இருப்பதை அவன் உணர்ந்து கொண்டான். அன்று அவன் சாப்பிடவில்லை. சாப்பாடு கிடைத்திருக்காமல் போயிருக்கலாம். மாதிரித் தேர்வு வேறு. விடைத்தாள் வாங்கிய சிறிது நிமிடங்களிலே அவன் மயங்கிவிட்டான். பசியில் மயங்கியவர்கள் படிப்பதற்கு பணப்பிரச்சனை.

பணத்தில் மயங்கியவர்களுக்கு படிப்பதே ஒரு பிரச்சனை. தன் புத்தகப் பையிலிருந்த வட்டார் கேனைத் திருகி அவன்மீது தெளித்தாள். மெல்லக் கண் திறந்தான்.

வகுப்பாசிரியர்,''காலைல சாப்டலையாப்பா ?'' இதுவரை கண்ட அனுபவத்தை ஒற்றை வரியில் கூறினார்.

“யாராச்சும் கேண்டீன் போயி எதாச்சும் வாங்கிக் கொடுங்க..'' ஆசிரியர் தன் பர்சிலிருந்து நூறு ரூபாயை எடுத்து நீட்டினார். யாரும் சட்டை செய்யாமல் எழுதிக் கொண்டிருந்தனர்.

“அதெல்லாம் வேண்டாம் சார்''. யாரென்று மெல்ல நிமிர்ந்து பார்த்தான். சற்றுமுன் தண்ணீர் தெளித்த அன்று தன் பிரமை நீக்கிய அதே முகம்தான். அவன் மெல்ல எழ முயன்றான். அவன் மீண்டும் தன் இருப்பிடத்தில் அமர்ந்தான். “சார் நானே போயி டீ வாங்கித் தந்தர்றேன்..'' ஆசிரியரிடம் அவள் கேட்டாள். அவர் மறுக்காமல் ஆமோதித்தார். அனேகமாக அவருக்கு ஒரு பையனும் பெண்ணும் குழந்தையாகப் பிறந்திருக்க வேண்டும். அப்படியிலாத மனநிலை நிச்சயம் மறுத்திருக்கும் என்பது மனிதாபிமான விதிகளில்

தலையாயது. அவர்கள் கேண்டீனை அடைகையில் இரண்டு மூன்று ஆசிரியர்கள் அவர்களைக் கடந்து சென்றனர். அவர்களுக்கு விஷயம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஏன் என்று கேட்காதது மாணவர்களிடம் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையாக இருக்கலாம். இதிலிருந்து அக்கல்லூரி சிறைச்சாலையின் கீழ் வராது என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

செல்ப் கல்லில் அவனை அமரச் சொல்லிவிட்டுச் சென்றவள் டீ உடன் இட்லியையும் வாங்கிவந்து அவன்முன் வைத்தாள். “ம்ம். சீக்கிரம் சாப்டு எக்ஸாம் எழுதனும்ல”. அவனுக்கு டீயே அதிகமாக இருந்தது.

“எனக்கு டீ மட்டும் போதும்”

“இட்லிய யாரு சாப்டுவா நா காத்தாலையே சாப்ட்டு வந்துட்ட.”

“என்னால சாப்ட முடியாதுப்பா” அவன் மீண்டும் மறுத்தான். அவள் எழுந்து சென்று கைகழுவி விட்டு வந்தாள். அவனும் தப்பித்தோம் மனநிலையில் இருந்தான். அடுத்தநொடி அவன் எதிர்பார்க்கவில்லை. அவன் வாய் அருகே இட்லி இருந்தது. இனியும் அவன் மறுக்க முடியாது. அவள் ஊட்டி விட்டாள். ஆம் ஒரு தாயைப் போல. அவன் கண்களில் நீர் தேங்கிவிட்டது. ஆனந்தக் கண்ணீர் என்று சமாளிக்க அவனுக்கு யாரும் கற்றுக் கொடுக்கவில்லை.சுற்றுலாவிலோ,பூங்காவிலோ வேறு இடத்திலோ அன்பைப் பரிமாறும் தாயைப் பார்க்கும்போது துக்கத்தை அனுபவித்திருக்கிறான். அன்று தேர்வு மிக எளிமையாக அவனுக்கு அமைந்தது.

இரண்டு லெமன் ஜூஸில் ஸ்ட்ரா போட்டு அந்த சிறுவன் கொண்டுவந்து அவர்களின் மேசையில் வைத்துச் சென்றான். உள்ளிருந்த சுவர்க் கடிகாரத்தில் சரியாக பன்னிரண்டு மணி

ஆகியிருந்தது. வெளியில் உள்ள தார்ச் சாலையில் அனல் கொதித்துக் கொண்டிருந்தது.

அவளைக் கண்டவுடன் “ரொம்ப நேரம் வெயிட் பண்றியா?”

“இல்ல இப்பதா வந்த”

அவள் கைகளில் நான்கு புத்தகங்கள் இருந்தன. எந்தப் பகுதியையும் ஜெராக்ஸ் எடுத்துப் பழகியதில்லை அனைத்தையும் எழுதி வைத்துக் கொள்கிறாள். தன் கையெழுத்தில் எவ்வவளவு கடினமான கேள்வியைப் படிப்பதிலும் அவளுக்கு ஒரு அலாதி இன்பம்.

“இன்னும் கொஞ்ச நேரம் லேட்டா வந்துருந்தின்னா இதெல்லாத்தையும் எடைக்கு போடலாம்னு நெனச்சேன்”. தங்கையைப் போல அவளின் பகடி இருந்தது.

“அப்படிப் பன்னிருந்தீனு வெய்யி? இத்தன நாளா நீ ஜெராக்ஸ் எடுக்காம மிச்சப் படுத்துன காசுக்கு மொத்தமா செலவு வந்துருக்கும். ம்ம்”. “நல்லா எக்ஸாம் எழுது நா கிளம்பற?” இது அவன்

“ஒரு ஜூஸ் ஆச்சும் சாப்புட்டு போலாம் இரு..”

“வேண்டா நா கலம்பற” மறுபடியும் அவன் மறுக்க அவள் இந்தமுறை கேள்வியை மாற்றிக் கேட்டாள்.

“கொறஞ்சா போய்ருவ?” இதற்குமேல் மறுக்க அவனுக்கு மனம் ஒன்றவில்லை.

“அப்புறம் எல்லாம் படிச்சாச்சா?” அவன் கேட்கும்பொழுது பாதி ஜூஸ் காலியாகி இருந்தது. ‘ம்ம்’ “ஏதோ கேக்கற கொஸ்டியன் பேப்பர பொருத்துதா இருக்கு”. “அதெல்லாம் சரி நீ படிக்கறேன்னு சொல்லிட்டு சாப்டாம அன்னிக்கு மாதுரி வந்தராத”

அவள் அக்கறையின் சாயல் அக்காவை ஒத்திருந்தது. இப்போது இரண்டு ஜூஸ்களும் காலியாகிவிட்டன. அவன் மேசை மீதிருந்த புத்தகத்தை எடுத்துக் கொண்டான். காசைக்கூட அவளேதான் கொடுத்தாள். பேக்கரியை விட்டு இருவரும் சாலையைக் கடந்து பேருந்து நிலையத்திற்கு வந்து சேர்ந்தனர்.

"போயிட்டு வர்றேன்" ஒரே சொல்லை இருவரும் ஒருசேரக் கூறிக் கொண்டனர். அவளுக்கான பேருந்தில் ஏறிக் கொண்டாள். அவன் அனாதை ஆசிரமத்தை நோக்கி நடக்கத் துவங்கினான்.

**– சே.தண்டபாணி தென்றல்** ஈரோடு




## அமர்நாத்

**பனப்பாக்கம்**


# குற்ற உணர்வு

தாலாட்டுப் பாடிட
அவளுக்கும் ஆசை தான்
அவள் அரக்கியும் அல்ல
கொடிய செயல் செய்யும்
கொடியவளும் அல்ல
கள்வன் செய்த சதியில் மாண்டுபோய்
கருணை கொண்டவளும்
கல் நெஞ்சமாகிறாள்..
பத்து மாதம் சுமந்து பெற்றவள்
பத்து நொடியில் வீசி எறிகிறாள்
குப்பையிலும் முட்புதரிலும்...
பிஞ்சின் அழுகுரல் கேட்டு
தவிக்கிறாள் துடிக்கிறாள்
செவிகள் கேளாதவளாய்ச் செல்கிறாள்
அந்த ஒரு நொடியில் அரக்கி ஆகிறாள்
வாழ்ந்து கொண்டே சாகிறாள்
ஒவ்வொரு இரவில்
அவள் பாடும் தாலாட்டின் ஏக்கம்
ஓயாத அலைகள்...

குற்ற உணர்வில்
பித்து பிடித்தவள் போல் திரிகிறாள்
மாற்றிக் கொள்ள உடையும் இல்லாமல்
வீதி எங்கும் அலைகிறாள்
எங்கேனும் குழந்தை கண்ணில்பட்டால்
தன் குழந்தை என அரவணைத்து
உதைபடுவாள் இரக்கமில்லாதவர்களால்..

வழி எங்கும் கண்ணீரோடு
புலம்பிக் கொண்டே செல்கிறாள்
சில நேரங்களில் சில கள்வர்கள்
குழந்தையைக் காண்பிப்பதாக அழைத்துக்
காம லீலைகள் புரிவதும் தெரியாமல்
குழந்தை எங்கே? என அழுவாள்
அவள் நிலை மிகவும் கொடியது தான்
முள் மேல் நடக்கும் நரக வேதனை தான்

நெஞ்சில் பாயும்
கடைசி சொட்டுக் குருதி வடியும் வரை
குழந்தையை மறக்க முடியவில்லை
வாழவும் முடியவில்லை
துடிதுடித்து மடிகிறாள்
தன் குழந்தை வீசிச் சென்ற
அதே இடத்தில்......




# ரஹ்மான் ஜியாவுதின்

பொள்ளாச்சி


# மகிழ்ச்சி ஒளித் துளிகள்

ஆனைமலை ஆற்றில் குளிக்கும் சிறுவன்





ஆனைமலை செல்லும் வழி
இருபுறமும் மரங்கள் வரவேற்கின்றன





# டிவோனா

சுவிட்சர்லாந்து

# கிரத்தின்



**தேவையான பொருட்கள்:**

- ஒலிவ் எண்ணெய் சிறிதளவு
- இறைச்சித்துண்டுகள்
- வெண்ணெய் 1 மேசைக்கரண்டி
- பெரிய வெங்காயம் 2
- வெள்ளைப்பூண்டு 2 பல்
- உப்பு தேவையான அளவு
- சுண்டக்காய்ச்சிய பால் 400 மி.லி.
- சாதாரண பால் 150 மி.லி.

- மிளகு சிறிதளவு
- அவித்த உருளைக்கிழங்கு 750 கிராம் (2 மி.மீ. தடிப்பில் துண்டுகளாக வெட்டியது)
- பாற்கட்டி (துருவல்)

## செய்முறை :

⇒ சட்டியினுள் சிறிதளவு ஒலிவ் எண்ணெய் விட்டு, மிகச் சிறிதாக வெட்டிய இறைச்சித்துண்டுகள் இடவும்.

⇒ இறைச்சி வெந்ததும் வெண்ணெய், வெட்டிய வெங்காயம், வெள்ளைப்பூண்டு விழுது இட்டு வதக்கவும்.

⇒ பின் சுண்டக் காய்ச்சிய பால், சாதாரண பால், சிறிது மிளகு, தேவையான அளவு உப்பு இட்டுக் கலக்கவும்.

⇒ 1–2 நிமிடம் காத்திருக்கவும்.

⇒ அவித்த உருளைக்கிழங்கை உள்ளிட்டுக் கலக்கவும்.

⇒ அதன் மேல் பாற்கட்டி (Cheese) தூவவும்.

⇒ இக்கலவையை 40 நிமிடம் 180°C பாகையில் அவணில் (oven) வைத்து எடுக்கவும்.

**– டிவோனா** சுவிட்சர்லாந்து



**சுரேகா**

**சுவிட்சர்லாந்து**

# பளிச்...

## வெள்ளியிலான பொருட்கள் புதியது போல் தோன்றுவதற்கு...

ஒரு பாத்திரத்தில் 2 லீட்டர் தண்ணீர் எடுத்துக் கொண்டு

அதனுள் உப்பு 2 தேக்கரண்டி,

வினிகர் 50 மி.லி.,

அலுமினியத்தாள் 10 செ.மீ. அளவு

இட்டுக் கொள்ளுங்கள்.

இத்துடன் வெள்ளியிலான பொருட்களை அரை மணி நேரம் ஊற வைத்த பின் கழுவுங்கள்...

உங்களுக்கே ஆச்சரியமாக இருக்கும். புதியது போல் பளிச்சிடும்.

# எல்லாமே மின்னும்

நாம் அன்றாடம் பயன்படுத்தும் பாத்திரம் கழுவும் திரவநிலைச் சவர்க்காரத்துடன்

50 மி.லி. வினிகர்

100 மி.லி. தண்ணீர்

பேக்கிங் பவுடர் 1 தேக்கரண்டி சேர்த்து

ஒரு Spray பாட்டிலில் கலந்து வைத்து கொள்ளவும்.

இதனால்

பாத்திரங்கள்...

சமையலறை...

குளியலறை...

சுத்தம் செய்தால்

எல்லாமே மின்னும்.

துர்நாற்றமும் இருக்காது .

கல்சியப்படிவு மற்றும்

எண்ணெய்ப் பசைகளும் இருக்காது.

**– சுரேகா சுவிட்சர்லாந்து**



**சாருதி**


அகவை 12

சுவிட்சர்லாந்து

# ஓவியத்துளிர்கள்



# உறுமீனுக்கான தவம்



– சாருதி சுவிட்சர்லாந்து

# நீமாவின்

# பென்சில் வரைவுகள்...




நிமா


நீமா

முதுமையின் சுருக்கம்
விரிந்து கொண்டிருக்கிறது
பழைய எண்ணம்



## இருட்டுதிரை கிழித்து

## வெளிச்சம் தேடும் முகம்



# வஞ்சகமில்லா நெஞ்சங்கள்...



வை.கபீஸ்ராம்
வயது 6



ம.தரணி
வயது 10

ம.ரேஷ்மா
வயது 9



நிவேதா
வயது 8



மாதங்கி
வயது 5

வேலுநாச்சியார் வேடத்தில்




ஆன்ட்றியா – வயது 7

திருமதி ரெஜினா – ஆரோன்

